# பெப்ரவரி – 25 – திங்கள்

புனித தாசீசியுஸ்

“நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்” மாற். 9: 2

## முதல் வாசகம் : சீராக் 1 : 1 – 10

ஞானமெல்லாம் ஆண்டவரிடமிருந்து வருகின்றது அது என்றும் அவரோடு இருக்கின்றது. கடல் மணலையோ மழைத்துளியையோ முடிவில்லாக் காலத்தையோ யாரே கணக்கிடுவர்? வான்வெளியின் உயரத்தையோ நிலவுலகின் அகலத்தையோ ஆழ்கடலையோ ஞானத்தையோ யாரே தேடிக் காண்பர்? எல்லாவற்றுக்கும் முன்னர் ஞானமே உண்டாக்கப்பட்டது கூர்மதி கொண்ட அறிவுத்திறன் என்றென்றும் உள்ளது. (உயர்வானில் உள்ள கடவுளின் வாக்கே ஞானத்தின் ஊற்று என்றுமுள கட்டளைகளே அதை அடையும் வழிகள்.) ஞானத்தின் ஆணிவேர் யாருக்கு வெளியிடப்பட்டது? அதன் நுணுக்கங்களை அறிந்தவர் எவர்? (ஞானத்தின் அறிவாற்றல் யாருக்குத் தெளிவாக்கப்பட்டது? அதன் பரந்த பட்டறிவைப் புரிந்துகொண்டவர் யார்?) ஆண்டவரே ஒருவரே ஞானியாவார் தம் அரியணையில் வீற்றிருக்கும் அவர் பெரிதும் அச்சத்திற்குரியவர். அவரே ஞானத்தைப் படைத்தவர் அதனைக் கண்டு கணக்கிட்டவர் தம் வேலைப்பாடுகளையெல்லாம் அதனால் நிரப்பியர். தம் ஈகைக்கு ஏற்ப எல்லா உயிர்களுக்கும் அவரே அதைக் கொடுத்துள்ளார் தம்மீது அன்புகூர்வோருக்கு அதை வாரி வழங்கியுள்ளார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் ஆட்சி செய்கின்றார். மாட்சியை ஆடையாய் அணிந்துள்ளார்.

## நற்செய்தி : மாற்கு 9 : 14 - 29

அக்காலத்தில் யாக்கோபு யோவான் ஆகிய மூவரும் மற்ற சீடரிடம் வந்தபொழுது, பெருந்திரளான மக்கள் அவர்களைச் சூழ்ந்திருப் பதையும் மறைநூல் அறிஞர் அவர்களுடன் வாதாடுவதையும் கண்டனர். மக்கள் அனைவரும் இயேசுவைக் கண்ட உடனே மிக வியப்புற்று அவரிடம் ஓடிப்போய் அவரை வாழ்த்தினர். அவர் அவர்களை நோக்கி, ”நீங்கள் இவர்களோடு எதைப்பற்றி வாதாடுகிறீர்கள்?” என்று கேட்டார். அப்போது கூட்டத்திலிருந்து ஒருவர் அவரைப் பார்த்து, ”போதகரே. தீய ஆவி பிடித்துப் பேச்சிழந்த என் மகனை உம்மிடம் கொண்டு வந்தேன். அது அவனைப் பிடித்து அந்த இடத்திலேயே அவனைக் கீழே தள்ளுகிறது. அவன் வாயில் நுரை தள்ளிப் பற்களை நெரிக்கிறான் உடம்பும் விறைத்துப்போகிறது. அதை ஓட்டிவிடும்படி நான் உம் சீடரிடம் கேட்டேன் அவர்களால் இயலவில்லை” என்று கூறினார். அதற்கு அவர் அவர்களிடம், ”நம்பிக்கையற்ற தலைமுறையினரே. எவ்வளவு காலம் நான் உங்களோடு இருக்க இயலும்? எவ்வளவு காலம் நான் உங்களைப் பொறுத்துக்கொள்ள இயலும்? அவனை என்னிடம் கொண்டுவாருங்கள்” என்று கூறினார். அவர்கள் அவனை அவரிடம் கொண்டுவந்தார்கள். அவரைக் கண்டவுடன் அந்த ஆவி அவனுக்கு வலிப்பு உண்டாக்க, அவன் தரையில் விழுந்து புரண்டான் வாயில் நுரை தள்ளியது. அவர் அவனுடைய தந்தையைப் பார்த்து, ”இது இவனுக்கு வந்து எவ்வளவு காலமாயிற்று?” என்று கேட்டார். அதற்கு அவர், ”குழந்தைப் பருவத்திலிருந்து இது இருந்துவருகிறது. இவனை ஒழித்துவிடத் தீயிலும் தண்ணீரிலும் பலமுறை அந்த ஆவி இவனைத் தள்ளியதுண்டு. உம்மால் ஏதாவது செய்ய இயலுமானால் எங்கள்மீது பரிவு கொண்டு எங்களுக்கு உதவி செய்யும்” என்றார்.இயேசு அவரை நோக்கி, ”இயலுமானாலா? நம்புகிறவருக்கு எல்லாம் நிகழும்” என்றார். உடனே அச்சிறுவனின் தந்தை, ”நான் நம்புகிறேன். என் நம்பிக்கையின்மை நீங்க உதவும்” என்று கதறினார். அப்போது மக்கள் கூட்டம் தம்மிடம் ஓடிவருவதை இயேசு கண்டு, அந்தத் தீய ஆவியை அதட்டி, ”ஊமைச் செவிட்டு ஆவியே,உனக்குக் கட்டளையிடுகிறேன் இவனை விட்டுப் போ் இனி இவனுள் நுழையாதே” என்றார். அது அலறி அவனுக்கு மிகுந்த வலிப்பு உண்டாக்கி வெளியேறியது. அச்சிறுவன் செத்தவன் போலானான். ஆகவே அவர்களுள் பலர், ”அவன் இறந்துவிட்டான்” என்றனர். இயேசு அவன் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டார். அவனும் எழுந்தான். அவர் வீட்டில் நுழைந்ததும் அவருடைய சீடர் அவரிடம் தனிமையாக வந்து, ”அதை ஏன் எங்களால் ஓட்ட இயலவில்லை?” என்று கேட்டனர். அதற்கு அவர், ”இவ்வகைப் பேய் இறை வேண்டலினாலும் (நோன்பினாலும்) அன்றி வேறு எதனாலும் வெளியேறாது” என்றார்.

**தியானம்:** விசுவசிப்பவர்களுக்கு எல்லாம் கூடும் என்று கூறிய இறைமகன் இயேசுவின் வார்த்தை அன்றும், இன்றும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. இன்றைய நற்செய்தியை படிக்கின்ற நாமும் எமது விசுவாச குறையை நீக்கி கடவுள் மேல் நமக்குள்ள நம்பிக்கையை வளர்த்து அவரது ஆற்றலை பெற்றுக்கொள்ள நாம் ஆசைப்படுகின்றோம். பலநேரங்களில் நமது செபமும், நம்பிக்கையும் அர்த்தமற்றதாக தோன்றக்கூடும். ஆனால் ஆழமான நம்பிக்கையை இறைவிசுவாசத்தை இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். சிறுவனைப் பிடித்திருந்த பேயை சீடர்களால் விரட்ட முடியாததற்கு காரணம் அவர்களது விசுவாசக்குறைவே காரணம். நம்பிக்கையில் வளர்வதற்கு கடவுளின் அருள் வேண்டும். ஆகவேதான் கடவுள்மீது நம்பிக்கையை வளர்ப்போம், அவரது ஆற்றல் நம்மில் செயல்படும்போது எவ்வகைப் பேய்களையும் நம்மால் விரட்ட முடியும்.